
# குரு பாஷியம்

காயத்திரி சித்தர் ஆர்.கே. முருகேசு மஹரிஷியின்
மகா சமாதி மண்டலாபிஷேக நிறைவு வெளியீடு



ஆக்கம்: சி. விநாயகமூர்த்தி ஆசிரியர் - தம்பிலுவில்

காயத்திரி தபோவனம்

0364

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரு பாஷியம்

காயத்திரி சித்தர் ஆர். கே. முருகேசு
மாமஹரிஷியின் மகா சமாதி மண்ட
லாபிஷேக நிறைவு வெளியீடு 2007.11.10




**ஆக்கம்:**

***திரு. சி. விநாயகமூர்த்தி***

Teacher Librarian
B.A. Dip. in Ed. (Merit)
Tamil Special Trained
Thambiluvil M.M.V.



தொடர்புகளுக்கு.

**காயத்திரி தவோவனம்**

**தம்பிலுவில்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே....


01. நூல்பற்றி.... 03
02. ஜோதி ஜோதி 04
03. பொற்பாதம் போற்றி 06
04. சுவாமிகளின் வாழ்க்கை வரலாறு 08
- i. 1933.10.26இல் அவதாரம்
- ii. குடும்ப நிலை
- iii. கல்வி
- iv. உத்தியோகமும் பதவிகளும்
- v. பன்மொழிப் புலமை
- vi. நூற்பணிகள்
- vii. ஆலையப்பணிகள்
- viii. சமயப்பணியும், ஆன்மீகப்பணியும்
- ix. சமுதாயப்பணிகள்
- x. அற்புதங்கள்
- xi. மகா சமாதி

05. கடவுளைக்காப்பாற்றுவோம் 16
06. பாடல் ஆனந்தம் ஆனந்தம் 17
07. இந்து சமய வழிபாட்டு மரபில் காயத்திரி வழிபாடு 18
- i. வழிபாட்டில் தாய் தந்தையரை விளித்தல்
- ii. எல்லோரும் ஈடுபடுதல் - பரஸ்பர நோக்கு
- iii. குருவழிபாடு
- iv. மஹரிஷிகள் வழிபாடு
- v. வேத வழிபாடும், ஆகம வழிபாடும்
- vi. இயற்கை வழிபாடு
- vii. நித்திய, நைமித்திய கும்பாபிஷேக கிரியைகள்
- viii. விரதங்களும் விழாக்களும்
- ix. தலயாத்திரை
- x. குருவும் தீட்சையும்
- xi. ஸ்தூல நிலையும் சூட்சுமநிலையும்

08. பாடல் சரணம் சரணம் 24
09. பாடல் மௌனம் என்ன 26
10. பாடல் காய்த்திரி நாதா 27
11. எங்கள் குல தெய்வம் 28
12. தம்பிலுவில் காயத்திரி தவோவனம் 29





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் பற்றி........

*ஓம் ஸத்குரு பாதுகாப்யாம் நமக!*

*ஓம் தத்புருஷாய வித்மகே*
*காயத்திரி ப்பிரியாயை தீமஹீ*
*தன்னோ முருகேசு மஹரிஷிப் பிரசோதயாத்*

முருகேசு சுவாமிகளின் வாழ்க்கை வரலாறு என்பது ஓர் பெரிய காவியம். அவரைத் தெய்வமாகப் பார்ப்பவர்களுக்கு அவர்தான் சர்வ வல்லமை வாய்ந்த தெய்வம். அவரை மனிதராகப் பார்ப்பவர்களுக்கு அவர் ஓர் சராசரி மனிதர். அவரை வள்ளலாகப் பார்ப்பவர்களுக்கு அவர் பெரிய கொடை வள்ளல் அவ்வாறே அவரை வைத்தியராக, ஞானியாக, சித்தராக, வழிகாட்டியாக, ஆலோசகராக, அவதாரமாக எல்லாம் பார்ப்பவர்கள் இருக்கின்றார்கள்.


இவற்றில் ஒரு கோணத்தில் கூட சுவாமிகளை ஆராய்ந்து பார்ப்பதற்கு எம்மால் இயலாது அவரது முழுவரலாறும் கூறுவ தென்பது எதுதுணை கடினமானது. சுவாமிகளின் பால் கொண்ட பக்தியினால் சில வார்த்தைகளாவது எழுத வேண்டும் என்ற எண்ணம் எனது அடிமனதிலே என்னை அறியாமலே எழுந்தது.

சுவாமிகளின் மகா சமாதி மண்டலாபிஷேக நிறைவு தினத்தில் (10.11.2007) இதை வெளியிடுவதற்கு எனது சிற்றறிவுக் கெட்டிய வகையில் முயற்சி செய்திருக்கிறேன். சுவாமிகளை நன்கு அறிந்தவர்களும் அவரிடம் ஆன்ம ஞானம் பெற்றவர்களும் அவரது போதனைகளின்படி நடப்பவர்களுக்கும் மத்தியில் இச் சிறிய ஆக்கம் எத்தகைய பயன் உடையதாக அமையும் என்பதையும் நான் அறியேன். சுவாமிகளுக்காகச் செய்த இச் சிறிய காணிக்கையில் ஏதும் குற்றம் குறைகள் இருந்தால் பெரு மனதுடன் மன்னித்து இதை ஏற்குமாறு தாழ்மையுடன் வேண்டுகின்றேன் அத்துடன் இந் நூலை அச்சிட்டு வெளியிடுவதற்கு உதவிய திருக்கோவில் MRS அச்சகத்தாருக்கும், கணனி அச்சுப் பதிப்பு செய்த மருமகள் க.சுமதினிக்கும் மனமார்ந்த நன்றியைக் கூறுகின்றேன்.

- ஆசிரியர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜோதி ஜோதி

ஜோதி ஜோதி ஜோதி ஜோதி
ஜோதியே ஜெகஜோதியே
ஆதி ஆதி ஆதி ஆதி
ஆதியே அருள் ஆதியே

(ஜோதி)

நீதி நிலவில் அன்றும் இன்றும்
நின்றிலங்கும் ஜோதியே
நிமல வடிவில் உலகம்முழுதும்
நிறைந்த எங்கள் ஜோதியே

(ஜோதி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணுலகமும் மண்ணுயிர்களும்
வேத விதியும் ஜோதியே
கண்ணுள்ளாடும் மணியும் ஒளியும்
கருணை வடிவும் ஜோதியே (ஜோதி)

அன்பு மயமும் அறிவியலுயர்வும்
ஆன்ம ஞானமும் ஜோதியே
அரிய தபசு புரிய நமதுள்
எரியும் ஜோதி ஜோதியே (ஜோதி)

திரு பெருகிய அருளொளிமய
தீப ஜோதி ஜோதியே
கிருபை பெருகி திருவருள் பெற
வருக வருக ஜோதியே (ஜோதி)


கணபதியோடு முருகனும்
கலைவாணியும் பரஞ்ஜோதியே
கதிர் மதியோடு உலகளாவிய
காரணிப் பொருள் ஜோதியே (ஜோதி)

## ஸ்ரீ கண்ணைய யோகீஸ்வரர் துதி

காவி உடுத்திடாமல் கமண்டலம் எடுத்திடாமல்
காட்டிடை அலைந்திடாமல் கனலிடை நலிந்திடாமல்
பூவுலகதனை சுத்தப் பொய்யென்றும் புகன்றிடாமல்
புறத்தொரு மதத்தினரை புண்படப் பேசிடாமல்
வேலைகள் செய்தற்போதும் தெய்வத்தைத்
தெரிவோமென்று தெளிவுறக்காட்டினாய் உன் தினசரி
வாழ்க்கை தன்னால் தீவினை இருட்டைப் போக்கி
ஜெகமெல்லாம் விளங்கும் ஆன்மயோகி ஞானதீபமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பொற்பாதம் போற்றி

மறைந்தும் மறையாத எம்குல உயர் தெய்வம்
இறவாத ரோின்பப் பேறடைந்த பிரம்ம குரு
பிறந்த பயனதனை எமக்குணத்திய ஞான குரு
பேரறிவுப்பொக்கிசமாய்த் திகழ்ந்த சற்குரு
அகண்ட பரிபூரண சச்சிதானந்த சற்குரு ஜோதி
காயத்திரி சித்தர் டாக்டர் ஆர் கே முருகேசு சுவாமிகள்
பொற்பாதம் போற்றி போற்றி பல்லாயிரம் கோடி போற்றி

மகாசமாதி பெற்றுயர்ந்த சித்தர்களை ஞானிகளை
கேட்டு அறிந்ததுண்டு அவர்தம் பொன்னுடல்
வனங்களில், மலைகளில்,மயானங்களில் ஆச்சிரமங்களில்
அமையப் பெற்றதென அறிந்ததுண்மை

எம் பெருமான் முருகேசு சுவாமிகளின் பொன்னுடல்
உலக ஆன்மிக ஆராய்ச்சி நிலையம் எனப்
புகழப்பட்ட நுவரெலியா ஸ்ரீ லங்காதீஸ்வரர்
ஆலயத்து வளாகத்தில் எழில் மிகு விஸ்த்தீரண
மகா மண்டபத்தில் ஸ்ரீ காயத்திரி தேவியின்
மூலவிக்கிரகம் அமைந்திருக்கும் சந்நிதானத்தின் முன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம் கைகளாலேயே நூற்றுக்கணக்கான யாகங்களை
நிகழ்த்திய யாககுண்டலத்திற்குச் சமீபமாக
அமையப் பெற்றிருப்பது அவர் செய்த மாபெரும் தவப்பயன்
தவப்பயனால் மகாசமாதி நிலைபெற்ற ஞானகுருவே போற்றி

வாக்கினிலே நல் இனிமையும் வளமார்ந்த உயர்
சிந்தனையினிலே மிகு தெளிவும் உலக
நோக்கினிலே பிறர் நலம் எனும் தூர திருஷ்டியும்
வல்லமைகளிலே அட்டமா சித்திகளின் ஆற்றலும்

பரிவினிலே ஏழை எளியவர்க்கிரங்கிடும் உள்ளமும
தோற்றத்திலே எளிமையும் சாந்த சொரூபமும்
நடையினிலே குடுகுடெனும் பிடி நடையும்
உடையினிலே பரிசுத்தமான தூயவெண்மையும்
முடியினிலே நாணற்பூ மலர்ந்த தன்மையும்
இனி எங்கு காண்போம் குருநாதா
எம் குலதெய்வமே உம் பொற்பாதம் போற்றி



சுவாமியின் பொன்னுடல் தாங்கிய பேழை பக்தர்களால் ஊர்வலமாக எடுத்துச்செல்லல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவாமிகளின் வாழ்க்கை வரலாறு

### i. *1933-10-26 இல் பூவுலகில் அவதரித்தார்*

பாரத பூமி பழம் பெரும் பூமி, இந்து சமய தத்துவசிந்தனைகளை அகிலத்திற்கு பறை சாற்றிய புண்ணிய பூமி அங்கு தான் கடவுளர் களும் மன்னர்களாக வந்து ஆட்சி செய்த வரலாறும் ஞானிகளும் சித்தர்களும், மகரிஷிகளும், நாயன்மார்களும், ஆழ்வார்களும், பேரறிஞர்களும் தோன்றி அரும் பெரும் சாதனைகளையும் அற்புதங்களையும் புரிந்துள்ளனர். அத்தகையதோர் ஆன்மீகக்கரு இலங்கையில் அவதரித்தது.

ஆம் காயத்திரி சித்தர் முருகேசு சுவாமிகளின் தாய் தந்தையர் தென்னிந்தியாவில் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள ஆவுடையார் கோவில் கிலாமத்தைச் சேர்ந்த இராமன் காளிமுத்து சந்தனம்மா தம்பதியராவர். இவர்கள் தொழிலின் நிமித்தம் இற்றைக்கு சுமார் 75 ஆண்டுகளுக்கு முன் இலங்கையில் கண்டி மாநகரத்தில் வசித்து வந்தனர். அவ்வேளையில் 1933 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதி இராமன் காளிமுத்து சந்தனம்மா தம்பதியினருக்கு சுவாமிகள் மகனாக அவதரித்தார்.

### ii. *சுவாமிகளின் குடும்ப நிலை*

சுவாமிகள் சாதாரண எளிமையான நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவர் ஆறு சகோதரர்களும், இரண்டு சகோதரிகளும் உடன் பிறப்புக்களாயினும் மூத்தவர் சுவாமிகளே. குடும்பப் பொறுப்பைத் தாங்க வேண்டிய நிலை இள வயதிலேயே சுவாமிகளுக்கு ஏற்பட்டது. தாய் தந்தை சொற் கேட்டு நடப்பவராகவும், சகோதர சகோதரிகளிடத்து பாசம் நிறைந்தவராகவும் சந்தர்ப்ப சூழ்நிலைக் கேற்ப தம் ஆசா பாசங்களைச் சுருக்கி தனக்கென வாழாது குடும்பத்திற்காக வாழும் ஒரு சிறந்த பிள்ளையாக பெற்றோராலும் மற்றோராலும் இனங்காணப்பட்டார். குடும்பச்சுமையைத் தாங்க வேண்டியவராக இருந்ததால் பொருளாதாரக் கஷ்டங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியவராக இருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### iii. சுவாமிகளின் கல்வி நிலை

"கருவிலே திருவுடையார்" என்பது போல் சுவாமிகள் கல்வியில் மிகப் பிரகாசித்தார். கல்வி கற்கும் பராயத்தில் தனது 10 ஆவது வயதிலே கண்டியில் குண்டக சாலைக்கு அருகில் உள்ள பள்ளேகல தோட்டத்தில் நண்பர்களுடன் விளையாடிக் கொண்டிருக்கும் போது சந்நியாசி ஒருவரால் முதன் முறையாக ஆட்கொள்ளப்பட்டமை சுவாமிகளின் கல்விக் கண்களை அகலத் திறந்தன. அந்த முனிவர் சுவாமிகளின் கைகளிலே "விநாயகர்கவசம்" என்ற சிறிய புத்தகத்தைக் கொடுத்து "இதை நீ தினமும் பாராயணம் செய் வாழ்க்கையில் பெரும் உயர்வடைவாய்" என ஆசீர்வதித்தமை சுவாமிகளுக்கு கல்வி அறிவோடு ஞானத்தையும் ஊட்டியது. இருந்தும் குடும்பத்தின் கஷ்டநிலை காரணமாக தனது 14 வது வயதிலேயே பள்ளிப் படிப்பை நிறுத்திக்கொண்டார்.

### iv. *சுவாமிகளின் உத்தியோகமும் பதவிகளும்*

ஆரம்பத்தில் குடும்பக் கஷ்டத்தை போக்குவதற்கு ஓர் உணவு விடுதியில் சிற்றூளியராகப் பணி புரிந்தார். பின்னர் ஓர் அலுவலகப்பணியாளராகக் கடமையாற்றினார். சுவாமிகளுக்கிருந்த விடா முயற்சியும் தன்னம்பிக்கையும் கல்வித்திறனும் அவரை ஓர் ஆங்கிலக் கம்பனியின் உயர் அதிகாரியாக உயர்த்தியது. 1994 இல் உலக ஆன்மிகப் பாராளுமன்றத்தின் தலைவராகத் தேர்ந் தெடுக்கப்பட்டார். புதுடில்லியிலுள்ள விஷ்வ உணாயன் ஷம்ஷாட் அலுவலகம் சுவாமிகளுக்கு உலக அபிவிருத்தித் துறையில் தத்துவம், விஞ்ஞாம், இலக்கியம் ஆகிய துறைகளுக்கான டாக்டர் பட்டத்தினை வழங்கி கௌரவித்தது.

### v. *சுவாமிகளின் பன்மொழிப் புலமை*

சுவாமிகள் தமிழ் மொழியில் ஆழமான அறிவுடையவர் என்பதை அவரது ஆன்மிகச் சொற் பொழிவுகளும் அவர் எழுதிய நூல்களும் புலமைப்படுத்தும், சிங்கள மொழியிலும் தேர்ச்சி பெற்றிருந்தார். இலங்கையின் பெரும் பான்மைச் சமூகத்தின் மொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களமாக இருப்பதால் தினமும் சுவாமிகளைத்தேடி சிங்கள இனப் பக்தர்கள் வந்த வண்ணமே இருப்பார்கள் அவர்களுடன் சிங்கள மொழியில் சிறப்பாக உரையாடும் போது அவர்களே வியப்படைவர். சில சமயங்களில் கூடுதலான பக்தர்கள் திரண்டிருக்கும் போது தமிழ் மொழியில் வேறாகவும், சிங்கள மொழியில் வேறாகவும் ஆன்மிகச் சொற் பொழிவுகளை நிகழ்த்துவார். காயத்திரி மந்திர மகிமை முதலிய புத்தகங்களை சிங்களத்திலும் வெளியிட்டுள்ளார். வெளிநாட்டவர் அமெரிக்கா, ஜேர்மன், தென்னாபிரிக்கா, மலேசியா, கனடா முதலான நாடுகளிலிருந்தும் வந்து சுவாமிகளைத் தரிசிக்கும் போது அவர்களிடம் ஆங்கிலத்தில் மிகச் சிறப்பாக உரையாடுவார். சுவாமிகள் ஆங்கிலத்திலும் பல நூல்களை எழுதியுள்ளார். மலையாள மொழியில் இருந்த சங்கரரின் பஜகோவிந்தம் எனும் 31 பாடல்கள் கொண்ட கவிதைத் தொகுதியை தான் படித்து இன்புற்றதனை தமிழ் பக்தர்களும் அறிய வேண்டும் என்று அதனை தமிழில் மொழி பெயர்த்து ஆதிசங்கரர் அருளிய பயகோவிந்தம் என்னும் நூலாக வெளியிட்டுள்ளார். இவ்வாறு தமிழ், சிங்களம், ஆங்கிலம், மலையாளம் முதலிய மொழிகளிலே சுவாமி தேர்ச்சி பெற்றிருந்தார்.

***vi. சுவாமிகளின் நூற்பணிகள்***

தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில் பல் வேறு புத்தகங்களைகளை சுவாமிகள் வெளியிட்டிருப்பது அவரது ஆழமான அறிவையும் சமய தத்துவ, விஞ்ஞானத் துறைகளிலே தனக்கிருந்த புலமையையும் உணர்த்தும். அவர் எழுதி வெளியிட்ட நூல்கள் வருமாறு

01. ஸ்ரீகாயத்ரி மந்திர மகிமை
02. ஞானகுரு
03. மனித காந்தம்
04. எளியமுறை யோகப்பயிற்சி
05. சகல தெய்வ உபாசனா சித்தி சாதனை
06. காயத்ரி உபாசன பத்ததி
07. காயத்ரி இராமாயணம்
08. காயத்ரி கீதை
09. காயத்ரி மூலம் குண்டலினி விழிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. மனித உடலில் தெய்வ ஞானம்
11. காயத்ரி சகஸ்ர நாமம்
12. அருவமும் உருவமும்
13. சூஷ்ம திருஸ்டி விஞ்ஞானம்
14. பஜ கோவிந்தம்
15. ஏகாக்ர விஞ்ஞானம்
16. ஸ்ரீ லலிதா பஞ்ச ரத்னம்
17. யாக விஞ்ஞானம்
18. காயத்ரி ஸ்மிருதி, கீதை, உபநிஷத்
19. தியானம் என்றால் என்ன
20. மானச யோகம்
21. ஷட்பதி
22. ஸ்ரீலங்காதீஸ்வரர்ஆலயகும்பாபிஷேக சிறப்புமலர் (நுவரெலியா1996)
22. சப்தரிஷி மண்டல கும்பாபிஷேக சிறப்புமலர் (மட்டுநகர் 2004)

**சுவாமிகளால் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டவை**

01. Spiritual Teaching of Swami Murugesu
02. The Grade Science and Power of Gayathri
03. Spiritual Tenets of Sri Gayathri Peetam
04. Veda Manthra
05. Science of Ciear Voyance
06. Idol Worship
07. Human Magnetism
08. Cosmo mystic Meditation



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## vii. *சுவாமிகளின் ஆலயப்பணி*

சுவாமிகளால் முதன் முதலில் அமைக்கப்பட்ட ஆலயம் நுவரெலியா லேடி மக்கலம் வீதியில் அமைந்திருக்கம் ஸ்ரீ லங்காதீஸ்வரர் ஆலயமாகும். ஸ்ரீ சிவபால யோகி மகராஜ் பன்னிரெண்டு வருடங்கள் கடும் தவம் செய்து சிவன் அருளால் இந்தியாவின் நருமதை நதியில் இருந்து 1978 ஆம் ஆண்டு கண்டெடுத்த உயிர் இலிங்கம் இக்கோயிலில் பிரதிஸ்டை செய்யப்பட்டள்ளது. இதுவே காயத்ரி சர்வதேச அமையத்தின் தலைமைப்பீடமும் ஆகும். பரிவார தெய்வங்களுக்கும் கோவில்கள் அமைந்துள்ளன. இதற்கருகில் மிகப்பிரமாண்டமான தியான மண்டபமும் அமைந்துள்ளது.

அடுத்ததாக அம்பாறை மாவட்டத்தின் தெற்கே தம்பிலுவில் எனும் அழகிய கிராமத்தில் "ஸ்ரீ காயத்திரி தபோவனம்" எனும் மிகப்பிரமாண்டமான வளாகத்தில் காயத்திரி மூலவிக்கிரகத்துடன் சிவலிங்கம், மகாமேருயந்திரம் அமையப்பெற்ற மூலஸ்தானம் மற்றும் பிள்ளையார், முருகன், விஷ்னு ஆஞ்சநேயர், அகஸ்த்தியர், விஸ்வாமித்திரர் திருவுருவங்களும் அமையப்பெற்ற ஆலயம் அமைந்துள்ளது.

மட்டக்களப்பு கல்லடி காயத்திரி கலாசார மண்டபம், மட்டக்களப்பு நாவலடி புதுமுகத்துவாரத்தில் அமைந்திருக்கும் சப்தரிஷி வளாகத்தில் சப்தரிஷிகளுக்கு தனியான, உலகில் வேறு எங்குமே அமையப்பெறாத எழுகோண வடிவிலான ஆலயமும் மகாமேரு யத்திரம் கருப்பக்கிரகத்தில் பிரதிஸ்டை செய்யப்பட்ட தனியான மகா மேரு ஆலயமும் மகா விஷ்னு ஆலயமும் அமைந்துள்ளது. இவை யாவும் சுவாமிகளின் அயராத முயற்சியால் அமைக்கப்பட்டன.

ஆலயங்கள் அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ள இடங்கள் அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பிரதேச செயலகப்பிரிவில் விநாயகபுரம் காயத்ரி கிராமம், திருகோணமலையில் கன்னியாய் என்னும் இடத்தில் ஆத்ம யோக ஞான சபை, வவுனியா, கொழும்பு இவ்விடங்களில் இன்றும் காயத்ரி யாக பூசைகளும் வஜனைகளும் நடைபெறுகின்றன. வெளி நாடுகளில் தென்னாபிரிக்கா, ஜேர்மன், மலேசியா, இந்தியா, அமெரிக்கா, கனடா, சுவிஸ், சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும் தியான மண்டபங்கள் அமையப் பெற்றுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயம், ஆன்மிகம் என்பன வெவ்வேறு பொருளுடையன (Religion,Spirituality) சமயம் என்றால் வழி, பாதை, நெறி, மார்க்கம் என்று பொருள்படும். வாழ்க்கைக்கு வழி காட்டும் மார்க்கமே சமயம். ஒவ்வொருவரும் தெய்வ நம்பிக்கையின் பால் சார்ந்து நின்று அன்பு, அறம், உண்மை, நீதி, சாந்தம், அழகு, நன்மை முதலிய நற்பண்புகளை அல்லது தெய்வீகப்பண்புகளைக் கடைப்பிடித்து வாழ்வதற்கு சமயம் வழிகாட்டுகின்றது. இதற்கு கோயில்களும், கிரியைகளும், வேள்விகளும், யாகங்களும், விழாக்களும், விரதங்களும், பண்டிகைகளும், பழக்கவழக்கங்களும் வழிகாட்டுகின்றன. இவை அனைத்திற்கும் சுவாமிகள் காயத்ரி வழிபாட்டின் மூலம் வழிகாட்டினார்.

ஆன்மிகம் (Spirituality) என்பது ஆன்மா தொடர்பானது. ஒவ்வொருவரதும் உடலிலிருந்தும் அவ்வுடலை இயக்கும் சக்தியே ஆன்மா ஆகும். ஆன்மா இல்லையென்றால் உடல் இயங்க முடியாது. இந்த ஆன்மாவுக்குத்தான் இறை உணர்வை அனுபவிக்கின்ற பேறுகிடைக்கின்றது. இறைவனோடு இரண்டறக்கலந்து பேரானந்தப் பேற்றை அனுபவிக்கும் வல்லமை ஆத்மாவுக்கே உள்ளது. இதற்கு ஆன்மாவை தயார்படுத்துகின்ற வழிகளாகவே தியானம், தவம், ஜெபம் முதலிய வழிகள் உள்ளன. இந்த வழிகளையே சுவாமிகள் கூடுதலாகப் போதித்த வண்ணம் இருப்பார். சுவாமிகள் அடிக்கடி கூறுவார் “நான் என்னை நாடி வருபவர்களைப் பார்க்கவில்லை அவர்களது ஆத்மாவைப் பார்க்கிறேன்” என்பார் சுவாமிகளின் பக்தர்களில் சிலர் ஆன்மீகத்தில் முன்னேறி சுவாமிகளோடும் தெய்வத்தோடும் சூட்சும நிலையில் தொடர்பு கொள்ளக்கூடிய நிலையை அடைந்திருக்கிறார்கள் என்பது குறிப்பிடக்கூடிய ஓர் உண்மை. இந்த முன்னேற்றத்திற்கான பணிகளே சுவாமிகள் காட்டிய ஆன்மிகப் பணிகளாகும். எனவே சுவாமிகள் சமயத்திற்கும் ஆன்மீகத்திற்கும் அரும் பெரும் பணிகளை ஆற்றியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ix. சுவாமிகளின் சமுதாயப்பணிகள்

சமுகத்திலுள்ள பல தரப்பட்ட மக்களையும் அவர்களது தேவைகளையும் உணர்ந்து செயலாற்றியவர் சுவாமிகள். வறியவர்களுக்கு வாரி வழங்கும் வள்ளளாக இருந்தார் தன்னை நாடி வருபவர்களுக்கு உடை, உணவு, அன்பளிப்புப் பொருட்களை வழங்கிக்கொண்டே இருப்பார். பசித்தவர் பசி ஆற அன்னதானம் என்னும் மகா சேவையை ஆரம்பித்தார். சிறுவர் இல்லம், அனாதைஇல்லம், முதியோர் இல்லம் என்பவற்றுக்குத் தன்னால் இயன்ற உதவிகளைச் செய்வார். தனது பக்தர்களுக்கு உடைகளை வழங்கி அழகு பார்த்து மகிழ்வார். கோவில்களுடன் பக்தர்கள் தங்கிச் செல்வதற்கான மடங்களையும், சிறுவர் பாடசாலைகளையும் அமைத்துள்ளார். நோயாளர்களைக் குணப்படுத்தும் வைத்திய சாலையையும் அமைத்தார். இந்தியாவிலிருந்து பெறுவதற்கரிய மருந்துகளைக் கொண்டு வந்து பல நோயாளர்களைக் குணப்படுத்தியுள்ளார். அரசியல் வாதிகள் முதல் சாதாரண ஏழை மக்கள் வரை அவரது சமுதாயப்பணி சென்றடைந்தன.

## x. சுவாமிகளின் அற்புதங்கள்

மனிதனும் தெய்வமாகலாம் என்ற இலக்கணத்திற்கு இலக்கியமானவர். சுவாமிகள் மனித வடிவில் நடமாடியவர் என்றே பலர்நினைக்கின்றனர். அவரது தெய்வ நிலையை எம்மால் உணர முடியாது என்பதற்காக இவர் தெய்வம் அல்ல என்ற முடிவுக்கு நாம் வர முடியாது. இந்த உலகம் முழுவதையும் இரட்சித்துக் காக்கின்ற தெய்வமே முருகேசு என்ற உடலில் நடமாடியிருக்கின்றார். அருள் பெறக்கூடிய பக்குவமுள்ளவர்களுக்கு அருள் கிடைத்திருக்கின்றது. கிடைத்துக் கொண்டும் இருக்கின்றது. தெய்வீக அவதாரங்கள் சில நோக்கங்களை நிறைவு செய்வதற்காக நிகழ்கின்றன. சுவாமிகளால் சில நோக்கங்கள் அல்ல பல நோக்கங்கள் இப் பூவுலகிலே நிறைவேற்றப்பட்டுள்ளன.

சமயத்தின் பெயரால் இடம்பெறும் மூடநம்பிக்கைகளுக்கு விஞ்ஞான ரீதியான விளக்கங்களைக் கொடுத்த பெருமை சுவாமிகளையே சாரும் அவரது நூல்கள் அத்தனையும் இதற்குச் சான்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து சமயம் அறுவகைச் சமய நெறிகளையே இதுவரை கண்டிருந்தது. ஆனால் இந்துசமயத்தில் காயத்ரி வழிபாடு என்னும் ஓர் புதிய வழிபாட்டு மரபும், புனித மார்க்கமும் தோன்றி வளரர்வதற்கு சுவாமிகளே காரண கர்த்தாவாக இருந்திருக்கிறார்.

தெய்வத்தோடும் மஹறிஷிகளோடும் தொடர்பு கொள்ளக் கூடியவராக இருந்ததுடன் தான் மறுமை உலகிற்குச் சென்று வந்த உண்மைகளையும் நெருங்கிய பக்தர்களுடன் அளவளாவியிருக்கிறார். ஊமைகளைப் பேச வைத்தது முதல் தீராத நோய்களையும் குணப்படுத்தியுள்ளார். பூசை முதலிய கருமங்களில் பொருட்கள் கிடைக்காத சந்தர்ப்பங்களில் தனது சக்தியால் அவற்றைப் பெற்றிருக்கின்றார்.

மஹறிசிகளின் சமாதிகளுக்குச் சென்று தவம் செய்து சூட்சுமமாக இருக்கும் அவர்களிடம் இருந்து அரும் பெரும் பொக்கிசங்களைப் பெற்றிருக்கிறார். வான்மீகி மகரிஷி, வியாசர் மகரிஷி, போகர் மகரிஷி, திருமூலர் போன்ற மகான்களை சூட்சுமமாக தரிசித்து அவர்களிடம் இருந்து ஆன்மீக உயிர் மூலிகைகள் அவர்கள் வழிபட்ட நவபாஷாண லிங்கம் மந்திரக் கோல் அட்சய பாத்திரம் பாதாள மலர், தெய்வ விக்கிரகங்கள் என்பவற்றைப் பெற்றிருக்கின்றார்.

கொம்புத் தேங்காய் என்னும் தெய்வாம்சம் பொருந்திய அற்புதத்தேங்காய்(தம்பிலுவில் காயத்ரி தபோவனத்திலும் உள்ளது) மற்றும் 150 இற்கும் மேற்பட்ட சிறிய பெரிய அளவிலான உயிர் இலிங்கங்கள் கிடைக்கப் பெற்றமை.

அகஸ்தியமா மஹறிஷியால் ஆட்கொள்ளப்பட்டவர். சீதாபிராட்டியிடம் உணவு உட்கொண்டமை. கண்ணபரமாத்மாவின் சக்தியாம். ராதை சுவாமிகளிடம் ஆசீர்வாதம் பெற்றமை.

தர்ம கர்த்தா சபை இல்லாமல் ஆலயங்கள் இயங்குவது எங்குமே இல்லை ஆனால் சுவாமிகளின் ஆலயங்கள் எந்த ஒரு தலைவரும், காரியதரிசிகளும் இல்லாமல் இயங்குகின்றன. சுவாமிகளின் வேண்டுதலால் மகரிஷிகளின் அருளால் ஆலயங்கள் இயங்குகின்றமை மிக முக்கியமான அற்புதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## xi. மகா சமாதி நிலை

2007 ஒக்டோபர் மாதம் 24ம் திகதி பி.ப 4.10 மணியளவில் இந்தியாவில் தனது பொன்னுடலை நீத்தார். சுவாமிகளின் பொன்னுடல் தாங்கிய பேழை விமானத்தின் மூலம் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டு 26.09.2007 புதன்கிழமை ஸொர்ணமி தினத்தில் பி.ப 3.30 மணி தொடக்கம் 4.30 மணிவரையான அமிர்த சித்த யோகம் கூடிய புண்ணிய காலத்தில் நுவரெலியா காயத்திரி பீட தியான மண்டபத்தினுள் மகா சமாதியில் வைக்கப்பட்டது. தொடர்ந்து 48 நாள் சமாதியில் மண்டலாபிஷேக பூசை நடைபெற்றது. 2007.11.10 சனிக்கிழமை மகா சமாதி நிறைவு நாள் அனுஷ்டிக்கப்படுகிறது.


***கடவுளைக் காப்பாற்றுவோம்.***

அன்னைச்சித்தர் மூலிகை முனிவர். ஸ்ரீல ஸ்ரீ காகபு ஜண்ட தலையாட்டி சித்தரால் ஆட்கொள்ளப்பட்டு வழிநடத்தப்படும் இராஜ்குமார் சுவாமிகள் காயத்திரி சித்தரின் மஹா சமாதி தினத்தில் உரையாற்றிய போது கூறிய "கடவுளைக் காப்பாற்றுவோம்." என்ற மணிவாசகத்தை இவ்விடத்தில் நினைவு கூருகிறேன்.

கடவுள் தான் மக்களை காப்பாற்றுபவர். பக்தர்களும் கடவுளே எம்மை காப்பாற்றுங்கள் என்றே வேண்டுதல் செய்கின்றனர். ஆனால் இராஜ்குமார் சுவாமிகள் கூறியது என்ன? காயத்திரி சித்தர் சமாதிநிலை அடைந்து தெய்வத்துடன் ஐக்கியமாகிவிட்டார். அவர் தெய்வீகத்தன்மை பெற்றுவிட்டார். அவருடைய புகழையும் பெயரையும் நாம் பாதுகாக்கும் போதே அவருடைய தெய்வீகம் காப்பாற்றப்படும் என்றார். இதன்படி சுவாமிகளின் வழியில் நின்று அவரது நற்பெயரைக் காப்பாற்றுவோம். சுவாமிகளின் பெயரைச் சொல்லி ஆசாமிகளும் தோன்ற முற்படுகின்ற இக்காலகட்டத்தில் சுவாமி காட்டிய வழியையும் அவர்தம் பணியையும் முன்னெடுத்துச்செல்ல வேண்டியது பக்தர்களின் கட்டாய கடமையாகும். இக்கடமையை நிறைவேற்றி அவர்வழி நடக்கும் போது சுவாமியின் தெய்வீகம் பாதுகாக்கப்படும். கடவுளைக் காப்பாற்றுவோம். அவர் அருள் பெறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆனந்தம் பரம ஜனனம்
ஏகமே ஞான மூர்த்தி
யோகம் நித்தியம் சுகுண வதனம்
சற்குரு சத்திய ஜனனம்

ப்ரம்மானந்தம் பரம சொரூபம்
ஞானமே சற்குரு தேகம்
மோனம் நிஷ்டை அஸ்டசித்தியும்
சேருமே சற்குரு மூலம்

தியானம் பக்தி மந்திர சித்தி
கூடுமே சற்குரு நினைவால்
நாளும் சற்குரு பாதம் பணிவோம்
நன்மைகள் யாவும் பெறுவோம்

(ப்ரம)

யோகம் புஸ்பம் தீப தூபம்
யாவுமே சற்குரு ப்பிரியம்
ஏதும் சொற்ப தான நிவேதம்
போதுமே சற்குரு பணிய

(ப்ரம)

வேதம் கூறும் உண்மை தெளிய
மார்க்கமே சற்குரு பாதை
நாமும் அறிய தினமும் துதிப்போம்
போதனை சற்குரு கீதை

(ப்ரம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இந்துப் பாரம்பரியத்தில் காயத்திரி வழிபாடும் அதனை அடிப்படையாகக் கொண்ட பக்தி மார்க்கமும் உலகளாவிய ரீதியில் தோன்றிவளர்வதற்கு காயத்திரி சித்தர் ஆர். கே. முருகேசு சுவாமிகள் மூலகாரணயமாக இருந்தார்.**

## இந்து சமய வழிபாட்டு மரபில் காயத்ரி வழிபாடு

வழிபாடு என்ற சொல்லுக்கு வணங்குதல் பின் பற்றுதல் என்ற கருத்துக்கள் தமிழ் அகராதிகளில் காணப்படுகின்றன. இந்துப் பண்பாட்டில் வழிபாடு என்பது ஓர் கூறு அல்லது பகுதி எனலாம். இந்து சமயம் ஒரு தெய்வ வழிபாட்டுடன் பல தெய்வ வழிபாட்டையும் கொண்டுள்ளது. ஒவ்வொரு தெய்வத்திற்கும் ஒவ்வொரு வழிபாட்டு முறையையும் வகுத்துள்ளது. அடியவர் தெய்வத்தின் பால் ஈர்க்கப்படுவதற்கும், தெய்வ சக்தியைப் பெறுவதற்கும் வழிபாட்டு மரபுகளே ஊடகங்களாக அமைகின்றன.

இந்த அடிப்படையில் காயத்ரி வழிபாடும் ஒரு தனித்துவமான வழிபாட்டு முறையாக வளர்ந்து வந்திருப்பதை அவதானிக்கலாம். வேத கால வழிபாட்டு முறையில் இருந்து தற்கால ஆகம வழிபாட்டு முறை வரை கிரியைகளின் போது பிராமணர்கள் அல்லது பூசகர்களே முதல் இடத்தைப் பெற்றிருக்கின்றனர். இவர்களின் மனோ வலிமையிலும், மந்திர சக்தியிலுமே கிரியைகளின் வெற்றியும், தோல்விகளும் தங்கியிருந்தன. இவர்கள் மூலம் பெறப்படும் வெற்றி தோல்விகளை அனுபவிப்பவர்களாகவே சாதாரண மக்கள் அல்லது கிரியைகளில் பங்கேற்போர் இருந்து வந்தனர். வேள்வி, யாகம், தவம், விரதம், செபம், தியானம், தீர்த்தம் முதலிய வழிபாட்டு மரபுகளில் எல்லாம் அந்தணர்களே ஈடுபட்டு வந்தனர். ஆனால் காயத்ரி வழிபாட்டு முறை இவற்றில் ஓர் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தி சாதாரண ஒரு பக்தனும் தெய்வ குணத்தைப் பெறுவதற்கும், தெய்வ சக்தியை வளர்ப்பதற்கும் வழிகாட்டுவதாக அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### i. *வழிபாட்டில் தாய் தந்தையரை விளித்தல்*

காயத்ரி வழிபாட்டில் தாய் தந்தையரே முதலில் விளித்து அழைக்கப்படுகின்றனர். ஓம் தாயே நமக, தந்தையே நமக, சற்குருவே நமக என்றே வழிபாடு ஆரம்பிக்கப் படுகின்றது. இப் பூவுலகில் பிறப்பவர்கள் யாவரும் முதன் முதலில் தம் கண்ணால் காணுகின்ற தெய்வம் தாய் தந்தையரே என்ற உண்மை இதில் உணர்த்தப்படுகின்றது.
தைத்திரிய உபநிடதம் கூறும்

மாத்ரு தேவோ பவ! பித்ரு தேவோ பவ!
ஆசார்ய தேவோ பவ! அதிதி தேவோ பவ!

என்ற கருத்துக்களோடும் இவை தொடர்புபட்டிருப்பதைக் காணலாம். காயத்ரி சித்தர் முருகேசு சுவாமிகளும் தான் எழுதிய நூல்களில் எல்லாம் முகவுரைகளிலே "என்னைப் பிள்ளையாக ஈந்த என் அன்னை பிதாவுக்கு எனது முதல் வணக்கம்" எனக் கூறி இருப்பதும் சிந்திக்கத்தக்கது. எனவே தாய் தந்தையரே கண்கண்ட தெய்வம் என்ற உண்மை காயத்ரி வழிபாட்டில் உணர்த்தப்படுகின்றது.

### ii. *எல்லோரும் ஈடுபடுதல்*

இங்கு வழிபாட்டில் எல்லோரும் ஈடுபடுவது மிக முக்கியமான ஓர் விடயமாகும். பூசையை நடாத்துபவரும், பூசையில் ஈடுபடுபவர்களும் கூட்டாகவும், ஒன்றாகவும் இணைந்து தெய்வங்களின் திருநாமங்களையும், மந்திரங்களையும், இசைப் பாடல்களையும் பாடுவதுடன் தியானம், தவம், செபம் முதலிய சாதனைகளிலும் ஈடுபடுகின்றனர். அவரவரது உள்ளத் தூய்மைக்கும் பக்தி வைராக்கியத்திற்கும் ஏற்ப ஆன்மீகத்திலும் உயர்வடைய முடிகின்றது. மற்றுமோர் சிறப்பு என்னவெனில் சிறுவர், பெரியோர், பெண்கள், ஆண்கள் என அனைவரும் இனம், மதம், மொழி, பிரதேசம், நாடு என்ற வேறுபாடு இன்றி வழிபாட்டில் ஈடுபடுவதாகும். எனவே சமுதாயத்தை வளப்படுத்துகின்ற நோக்கில் காயத்ரி வழிபாடு அமைந்திருப்பதைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### iii. குரு வழிபாடு

காயத்திரி வழிபாட்டில் குருவுக்கு முதன்மையான இடம் வழங்கப்படுகின்றது. சர்வ வல்லமை வாய்ந்த குருவினால் பக்தர் கூட்டம் வழிநடத்தப்படுகின்றது. குருவே பிரமா, குருவே விஷ்னு, குருவே சிவன், குருவே யாவும் எனற சிந்தனை உயர் நிலையில் உள்ளது. "குருவில்லா வித்தை பாழ்" என்பது போல் குருவின்றி எதுவுமில்லை. என்பது காயத்ரி வழிபாட்டில் உணர்த்தப்படுகின்றது.

### iv. மஹரிஷிகள் வழிபாடு

விஷ்வாமித்திர மாமஹரிஷி மூலமே காயத்ரி வழிபாடு தோன்றியதாக கூறப்படுகிறது. மேலும் அகஸ்த்திய மாமஹரிஷி, மஹரிஷிகளின் மூலவராகக் கருதப்படுகின்றது. இதனால் இவர்களது திருவுருவங்களும் காயத்ரி ஆலயங்களில் பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபடப்படுகின்றன. இதனை நுவரெலியா ஸ்ரீ லங்காதீஸ்வரர் ஆலயம், தம்பிலுவில் காயத்ரி தபோவனத்தில் அமைந்துள்ள ஸ்ரீ காயத்திரி தேவி ஆலயம், மட்டக்களப்பு சப்தரிஷி வளாகத்தில் அமைந்துள்ள ஆலயங்களில் காணலாம்.

மிக முக்கியமான விடயம் யாதெனில் உலகிலேயே எங்குமில்லாத வாறு ஸப்த ரிஷிகளுக்கு ஆலயம் அமைந்திருப்ப தாகும். மட்டக்களப்பு புதுமுகத்துவாரம் நாவலடியில் உலகப் புகழ் பெற்ற ஸப்தரிஷி மண்டலம் எனும் ஆலயம் அமைந்துள்ளது. இதில் ஸப்தரிஷிகள் எழுவருக்கு விலையுயர்ந்த உலோகங்களைக் கொண்டு வடிவமைக்கப்பட்ட, வார்ப்புச் சிலைகள் உள்ளன. இவர்களுடன் ஏனைய மஹரிஷிகள், சித்தர்களின் நாமங்களும் வழிபாட்டின் போது உச்சரிக்கப்பட்டு தூப, தீப ஆராதனைகளும் இடம் பெறுகின்றன. மஹரிஷிகளதும், சித்தர்களதும் அருளாசியினால் காயத்ரி ஆலயங்கள் பொலிவு பெறுவதுடன் பக்தர்களும் நலம் பெறுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### v. *வேத வழிபாடும், ஆகம வழிபாடும்*

இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்களும் இந்து சமயத்தின் முதல் நூல்களாக விளங்குகின்றன. பிற்காலத்தில் உருவ வழிபாட்டையும், ஆலயக்கிரியை முயைகளையும் விளக்கிக் கூறும் நூல்களாக ஆகமங்கள் எழுந்தன. இந்து சமயத்திற்கு வேதம் பொது நூலாகவும் ஆகமம் சிறப்பு நூலாகவும் விளங்குகின்றன. இந்த இரண்டு புனித நூல்களும் கூறுகின்ற வழிபாட்டு முறைகளை நாம் காயத்ரி வழிபாட்டில் காணலாம்.

வேத வழிபாட்டில் வேள்வி யாகம் என்பன முக்கியம் பெறுகின்றன. காயத்ரி வழிபாட்டின் ஸ்தாபகக் குரு காயத்திரி சித்தரால் நடாத்தப்படும் யாகக் கிரியைகள் வேத வழிபாட்டு முறையை பிரதிபலிக்கின்றன. ஸ்தாபகக் குருவினால் ஆலயத்தில் விடேட பூசைகளும் நடாத்தப்படுகின்றன. அத்துடன் பூசகர்களும் அபிடேகம், ஆராதனை முதலிய கிரியைகளையும் செய்கின்றனர். இவை ஆகம வழிபாட்டைப் பிரதி பலிக்கின்றன. எனவே யாகத்தை அடிப்படையாகக் கொண்ட கிரியைகள் வேத வழிபாட்டையும், ஆலயத்தை அடிப்படையபகக் கொண்ட கிரியைகள் ஆகம வழிபாட்டையும் காயத்திரி வழிபாட்டில் உணர்த்துகின்றன.

### vi. *பல தெய்வ வழிபாடு*

பல தெய்வ வழிபாட்டுக்கு இடம் கொடுத்துள்ள எமது இந்து சமயத்தின் வழிபாட்டு முயைறயை காயத்ரி வழிபாட்டில் காணலாம். கணபதி, சிவன், விஷ்னு, முருகன், சிவலிங்கம், இராமர், கிருஸ்ணர், ஆஞ்சனேயர், அக்கினி, துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி, நாகம் முதலிய தெய்வங்களும் அவற்றுக்குரிய காயத்ரி மந்திரங்களை உச்சரித்து வழிபடப்படுகின்றன. எனவே இந்து சமயத்தின் எந்தப் பிரிவினருக்கும் பொருத்தமான வழிபாடாக காயத்ரி வழிபாடு அமைகின்றது. இதன் அடிப்படையில் இந்து சமயத்தின் பரந்த நோக்கு இங்கு நிலைநாட்டப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

vii. *இயற்கை வழிபாடு*

இயற்கைச் சக்திகளுக்கு தெய்வீகத் தன்மை கற்பிக்கப்பட்டு அவற்றைத் தெய்வமாக வழிபடும் மரபு உலகில் இந்து சமயத்தில் மாத்திரமே உண்டு. இத்தகைய இயற்கைச் சக்திகளுக்கும் முன்னுரிமை கொடுத்து தெய்வமாக வழிபடும் முறையை காயத்ரி வழிபாட்டில் காணலாம்.

சூரியன் இயற்கையின் அற்புதப்படைப்பு சூரியன் இல்லை என்றால் உலகமே இல்லை. இத்தகய சூரியனின் ஒளிக்கிரணங்களாக இருப்பதுதான் காயத்ரி. எனவே காயத்ரி இல்லை என்றால் உலகம் இல்லை. என்று கூறும் அளவுக்கு காயத்ரி வழிபாடு உயர்ந்துள்ளது.

மேலும் ஸப்தரிஷிகள் எழுவரும் 7 நட்சத்திரங்களாகவே உள்ளனர். ஸப்தரிஷிகளை வழிபடுவது நட்சத்திரங்களை வழிபடுவதாக உள்ளன. மட்டக்களப்பு ஸப்தரிஷி வளாகத்தில் நவகோள்களின் உருவப்படங்கள் வரையப்பட்டுள்ளன. இவை சிறிய உருவப் படங்களாக காயத்ரி பக்தர்களின் வீடுகளிலும் வழிபடப்படுகின்றன.

**நட்சத்திரங்களில் இருந்தும், நவகோள்களிலிருந்தும் சக்தி என்னுள் வரவேண்டும்** எனப் பூசையின் போது தியானிக்கப் படுகின்றது. உயிர் மூலிகைகளையும், சமித்துக்களையும் கொண்டே யாகங்கள் செய்யப்படுகின்றன. இவை இயற்கை நமக்குத் தந்த கொடை. அக்கினி இயற்யைச் சக்திகளுள் மற்றொன்று. அக்கினிக் கடவுளை துதித்தே யாகம் தொடங்கப்படுகின்றது. முடிவடைவதும் அவ்வாறே. நாகத்தை வழிபடுவதும் இயற்கை வழிபாடே. துளசி, அறுகம் புல் முதலியனவும் பூசையில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றது.

viii. *நித்திய, நைமித்திய, கும்பாபிஷேக கிரியைகள்*

தினமும் நடைபெறும் கிரியைகள் நித்திய கிரியைகளாகும். விஷேட தினங்களில் நடைபெறும்கிரியைகள் நைமித்திய கிரியைகளாகும். காயத்ரி வழிபாட்டிலும் நித்திய, நைமித்திய கிரியைகள் இடம் பெறுகின்றன. நுவரெலியா, தம்பிலுவில், மட்டக்களப்பு ஆகிய இடங்களில் அமைந்துள்ள ஆலயங்களில் நித்திய பூசைகள் இடம் பெறுகின்றன. தவிர பூரணை தினங்களிலும், குருவாரம் எனக் கூறப்படும் வியாழக்கிழமைகளிலும் நடைபெறும் கிரியைகள் நைமித்திய கிரியைகளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பாபிஷேகக் பிரியைகளும் உரிய சிவாச்சாரியார்களைக் கொண்டு செய்யப்படுகின்றன. தெய்வீக சக்திகளை வரவழைப் பதற்காக இக் கிரியைகள் இடம் பெறுகின்றன.

**ix. *விரதங்களும், விழாக்களும்***

சிவராத்திரி விரதம், நவராத்திரி விரதம், பூரணை விரதம் என்பன முக்கியமாக அனுட்டிக்கப்படுகின்றன. இத்தினங்களில் தியானம், ஜெபம், முதலிய சாதனைகள் மூலம் பக்தர்கள் தம்மை வளப்படுத்துகின்றனர். குருவின் துணையுடன் பக்தி பூர்வமாக பிரார்த்தனைகளில் ஈடுபடுகின்றனர். சிவராத்ரி போன்ற முக்கிய தினங்களில் இரத பவனியும் இடம் பெறுகின்றது.

**x. *தலயாத்திரை***

காயத்ரி பக்தர்கள் குருபக்தியையும், இறைபக்தியையும் வளர்த்தற் பொருட்டு காயத்ரி ஆலயங்கள் அமைந்துள்ள இடங்களுக்கு தலயாத்திரை செய்து அருளாசி பெறுகின்றனர். இதில் சிறப்பு என்னவெனில் வெளிநாடுகளிலிருந்தும் குறிப்பாக தென்னாபிரிக்கா, மலேசியா, இந்தியா, அமெரிக்கா, ஜேர்மன், இங்கிலாந்து முதலான நாடுகளிலிருந்தும் பக்தர்கள் தமது பிரம்ம குருவை காண்பதற்காகவும், அவரது ஆசிகளைப் பெறுவதற்காகவும், காயத்ரி ஆலயங்களைத் தரிசிப்பதற்காகவும் வருகை தருகின்றனர். இலங்கையில் இருப்பவர்களும் சரி, வெளி நாட்டில் எங்கு இருப்பவரும் சரி, எல்லோரும் ஒரேகுடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அதாவது காயத்ரி குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்ற குருவாக்கிற்கு இணங்கச் செயற்படுகின்றனர். எல்லாக் கோவில்களும் தங் கோவில்கள் எனக் கருதி தல யாத்திரை செய்கின்றனர்.

**xi. *குருவும் தீட்சையும்***

தீட்சை என்னும் சொல்லின் பொருள் ஞாத்தைக் கொடுத்து மலங்களை அழிப்பது என்பதாகும். காயத்ரி வழிபாட்டிலும் தீட்சைக்கு முக்கியமான பங்குண்டு. இந்து சமயத்தில் பல வகையான தீட்சைகள் உள்ளன. சாதாரணமாக தகுந்த ஆச்சாரியர்களினால் இவை வழங்கப்படுகின்றன. ஆனால் காயத்ரி தீட்சை அட்டமாசித்திகளையும் பெற்ற ஞான குருவினால் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**xi. ஸ்தூல நிலையும் சூட்சும நிலையும்**

தூலம் என்பது காட்சிக்குத் தெரிவது. சூட்சுமம் என்பது மறைவானது. இந்து சமயத்தின் படி சூட்சும உலகம் என்றும் ஓர் உலகம் உண்டு. இது சாதாரண மக்களின் கண்ணுக்குத் தெரியாது. ஞானிகள் அறிவார்கள். நாம் வாழுகின்ற உரகிலும் அது உண்டு. உதாரணமாக ஒருவர் இறக்கும் போது உயிர் உடலை விட்டுப் பிரிகின்றது அது இங்கேயே இருக்கின்றது. நம் கண்ணுக்குத் தெரிவதில்லை. சூட்சுமமான உலகில் கண்ணுக்குத்தெரியாமல் சித்தர்களும், ஞானிகளும், மகரிஷிகளும் சிரஞ்சீவிகளாக உலாவுகின்றனர். அவர்களால்த்தான் காயத்ரி கோவில்கள் வழிநடத்தப் படுகின்றன. அறிவார் அறிவர் அறிவிலார் அறியர் இதுவே உண்மை.



சரணம் சரணம் குருநாதா
சற்குரு சரணம் குருநாதா

அபயம் உந்தன் திருப்பாதம்
அன்பினில் ஊறிய மலர்ப்பாதம்
சரண் புகுந்தோம் ஐயா குருநாதா
சகலமும் மறந்தோம் குருநாதா

வேதப்பொருளாய் ஞானவடிவாய்
ஏகப்பொருளாய் இலங்கும் நாதா

(சரணம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயத்திரி மாதா அருள்வடிவாக
அன்பரின் மனதில் நிறைபவரே
காயத்திரீ உம்மில் வேறில்லை கண்டோம்
கற்பனைக்கெட்டா உயர் பொருளானாய்

திருவருளே இங்கு அருளுருவாகி
குருவடிவாக இலங்கும் நாதா

(சரணம்)

அன்னை தந்தை ஆருயிர் நீயே
ஐம்பூதப் பொருட்கள் அனைத்திலும் நீயே
அன்பருக்காக மஹரி அருளும்
அருமருந்தெனவும் அருள்பவரே

சற்குருவே இங்கு ஞானகுருவாகி
பிரம்மகுருவாக இலங்கும் நாதா

(சரணம்)

தம்பிலுவில் பதி தபோவனம் தனிலே
காயத்திரீ மகிமையை உணரவைத்து
தொண்டருக்காக தொலைவில் இருந்தும்
அருகில் இருந்தும் அருள்பவரே

குரு ஆசியுடனே அருளாசி பெறவே
கலங்குகின்றோம் ஐயா வணங்குகின்றோம்.

(சரணம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மௌனம் என்ன மௌனம் என்ன
சொல் குருநாதா
காத்திடும் கருணாகரா
சற்குருநாதா

பக்தர்கள் எமை காத்திடுவாய்
சாந்த சொரூபா
காணவா கேட்கவா
சொல் குருநாதா (மௌனம்)

உங்களிடம் நாங்கள் எங்கள்
நிலையினைச் சொன்னோம்
சொன்னதைக்கேட்டு மனம்
இரங்கவில்லையா? (மௌனம்)

பக்தியால் உமைப் பாடுகிறோம்
சுந்தர ரூபா
பக்குவம் எமக்கருள்வாய்
ஞான குமாரா (மௌனம்)

எங்குமே உமைக் காணுகிறோம்
பிரம்ம சொரூபா
ஏது நாம் பணியும் வழி
சொல் குருநாதா (மௌனம்)

ஆனந்த வடிவான உமது
ரூபத்தை என்றும்
காணவே பாக்கியம்
தந்தருள் நாதா (மௌனம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காயத்ரி நாதா பரம ஹம்சாயா
அடியவர் துயர் தீர்க்க ஓடோடி வா
இன்ன தென்று தெரியாமல்
செய்த பிழை தீர்ப்பாய்
இன்ன முதப் பெருவாழ்வை
நல்கிட வா வா (காயத்ரி)

மானிடப் புளுவாய் வழி தெரியாமல்
மானிலம் மீதில் அலை மோதினோம்
நீதிநெறி மாறியதால்
கோடி பழி சூழ்ந்த
மேதினியில் எமை
இரட்சிக்க வா வா (காயத்ரி)

என்ன தவம் செய்தோம்
ஞான குரு நாதா
உம்மைக் குருவாய்ப் பெற
என்ன தவம் செய்தோம்
அன்பர் எங்கள் மனக்கருத்தை
இன்னமும் நீ அறியாயோ........ஓ..
ஏழை பங்காளனே
எமைக் காக்க வா வா (காயத்ரி)

தம்பிலுவில் பதி அதன்
மகிமை உம்மாலே
எங்கும் சென்று நிலைத்திட
அருள் சேர்ந்ததே
தொண்டர் எங்கள் இதயத்தில்
ஆன்ம ஒளி ஏற்றி
தொன்மை மிகு உண்மைகளை
நல்கிட வா வா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எங்கள் குல தெய்வம்- எமக்கு
வந்தது உயர் தெய்வம்
என்றும் ஏக மூர்த்தி
எங்கள் சொந்தமே குருநாதா
ஏக மூர்த்தி எங்கள் சொந்தமே

உங்கள் அங்கம் பேரண்டம்
அதிலே அண்டும் உயிர்க்குலமே!!

வெள்ளை ஆடை சூடும் தெய்வமே
உம்மோடு உள்ளிருக்கும்
நாங்கள் சேமமே. (எங்கள்)

பரவெளி மீதிலே தரிசனமாகிடும்
ஐயா நீதான் எங்கள் குரு நாதா!!

கதி கதி என்றதும் குரு கதி சேருமே
துதிப்பவர் கைகளில் நம்பிக்கையும் கூடுமே
கருத்தினில் ஆடும் தெய்வமே குருநாதா
உன் பெயர் சொன்னால் நிம்மதி (எங்கள்)

நனைத்ததை நடத்திடும் வல்லமை உன் வசம்
நினைத்தால் வருமே உடனே குருநாதா

கடைந்தபின் கிடைப்பதோ பாற்கடல் அமுதமே
கடயைாமல் கைவரும் உமதருள் ஒன்றுதான்
ஜனங்களை ஆளும் அதிபதி தினம் தோறும்
உன்பெயர் சொன்னால் நிம்மதி (எங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்பிலுவில் காயத்ரி தவோவனம்

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்றுக்குத் தெற்கே சுமார் 8 மைல் (12 கிலோ மீற்றர்) தொலைவில் தம்பிலுவில் என்னும் அழகிய கிராமம் அமைந்துள்ளது. அக்கரைப்பற்றிலிருந்து இக்கிராமத்தை ஊடறுத்துச் செல்லும் பிரதான வீதி பொத்துவில் வரை சென்று இலங்கையின் பிரதான நகரங்களுடன் இணைகிறது. திருக்கோவில் பிரதேச செயலகப்பிரிவின் கீழ் வருகின்ற இக் கிராமத்தின் கிழக்குத் திசை முழுவதும் அழகிய கடற்கரைப் பிரதேசம். மேற்குத் திசை கடனீரேரி என அழைக்கப்படும் அழகிய களப்பு நீரால் சூழப்பட்டுள்ளது. கடல் நீரையும் களப்பு நீரையும் வேலியாகக் கொண்ட, நீர் வளம் குன்றாத இக்கிராமம் மிகப் பழமையான வரலாற்றுச் சிறப்பையும் கொண்டிருக்கிறது.

பழமை வாய்ந்த கண்ணகை அம்மன் ஆலயம் கிழக்கு மாகாணத்தில் முதன் முதலில் இங்குதான் அமையப்பெற்றது. புராதன மன்னர் காலத்து வரலாற்றுத் தொடர்புகளும் இக் கிராமத்துக்கு உண்டு. கண்ணகை அம்மன் ஆலயத்துடன், சித்தி விநாயகர் ஆலயம், விஷ்னு கோவில், சிவலிங்கப் பிள்ளையார் ஆலயம், தாழையடி சிவன் கோவில், நாக தம்பிரான் கோவில், முனையூர் வடபத்திர காளி அம்மன் ஆலயம் என பல கோவில்கள் இச் சிறிய கிராமத்தில் அமைந்திருப்பதுடன் தேசத்துக் கோவில் என அழைக்கப்படும் மிகப் பிரசித்தி பெற்ற திருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலாயுதர் ஆலயமும் இக்கிராமத்துக்கு அருகிலேயே அமைந்துள்ளது. விஷ ஜந்துக்கள் தீண்டினால் அவற்றை ஈர்த் தெடுக்கக் கூடிய அற்புத சக்தி உள்ள விஷக் கல் இரண்டும் இக் கிராமத்தின் தெற்கு எல்லையிலும் (திருக்கோவில் விஷக்கல்) வடக்கு எல்லையிலும் (விஷ்னு கோவில் விஷக்கல்) அமைந்துள்ளன. யாழ்ப் பாணத்தைப் போன்று கந்த புராண கலாசாரமும் புராணபடன மரபுகளும் ஆதியிலிருந்தே இக்கிராமத்திற்கு ஆன்மீக மணத்தை பரப்பியது.

இத்தகைய ஆன்மீகத் தொடர்பு கொண்ட தம்பிலுவில் கிராமத்திலே காயத்ரி தபோவனம் அமையப்பெற்றுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கிராமத்திற்குள் நுழை பவர்களை வரவேற்பது போன்று பிரதான வீதியின் ஒரு புறத்தில் சிவலிங்கப் பிள்ளையார் ஆலயமும், மறு பறத்தில் காயத்ரி தபோவனமும் அமைந்துள்ளது. நுவரெலியா காயத்ரி கோயிலுக்கு (ஸ்ரீ லங்கா தீஸ்வரர் ஆலயம்) அடுத்ததாக ஸ்ரீ காயத்ரி தேவிக்கு கோயில் அமைப்பதற்கு இலங்கையில் என்று கூறுவதிலும்விட உலகத்திலேயே மகானுபவான்களால் தெரிவு செய்யப்பட்ட இடம் தம்பிலுவில் கிராமமேயாகும். காயத்ரி சித்தர் மகரிஷிகளின் தொடர்பினால் இவ் விடத்தை தெரிவு செய்து உலகத்திலேயே காயத்ரி தேவிக்கு முதன்முறையாக கோயில் அமைத்திருக்கிறார் என்றால் இவ்விடத்தின் பெருமை ஊகித்து உணர வேண்டிய ஒன்றாகவும் உள்ளது.

அதிலும் காயத்ரி தவோவனம் அமைப்பதற்குத் தெரிவு செய்யப்பட்ட இடம் இன்னும் விஷேசமானது. இவ்விடத்தில் சூரிய உதயத்தையும் சூரிய அஸ்தமனத்தையும் வேறு எங்குமே இல்லாத வாறு மிகத் தெளிவாகப் பார்க்கக் கூடிய அற்புதம் உள்ளது. கோவிலின் பின் பக்க மதில் கடற்கரை, முன் பக்க பிரதான வீதிக்கருகில் களப்பு நீர் எல்லை. அருகில் சமரசம் உலாவுகின்ற மயான பூமி. முன்னால் அழகிய சிவலிங்கப் பிள்ளையார் ஆலயம் சுனாமிக்குப் பின்பு புதிதாக அமைக்கப்பட்டுள்ளது.

தென்னங் கன்றுகளாலும், பூஞ்செடி கொடிகளாலும் நிறையப் பெற்றுள்ள விஷ்த்தீரணமான நிலப்பரப்பு காயத்ரி தபோவனம் என அழைக்கப்படுகின்றது.இக் காயத்ரி தபோவன வளாகத்தில் ஸ்ரீ காயத்ரி தேவி ஆலயம், குரு பீடம், யாக சாலை, அன்னதான மடம், அறநெறிப் பாடசாலை, நாக தம்பிரான் கோவில், பக்தர்கள் தங்கும் மடம் தாமரைத்தடாகம், விற்பனை நிலையம் என்பன அமைந்துள்ளன.

சுமார் 85அடி நீளமும் 52அடி அகலமும் கொண்ட பிரமாண்டமான ஸ்ரீ காயத்ரி தேவி ஆலயத்தின் கருவறையில், பஞ்சமுக காயத்ரி விக்கிரகமும், நருமதை நதியில் சிவபால யோகி மகரிஷியால் கண்டெடுக்கப்பட்ட பசுவதீஸ்வரர் சிவலிங்கமும், மகாமேரு யந்திரமும் பிரதிஷ்ட்டை செய்யப்பட்டுள்ளன. கருவறைக்கருகில் முன்னால் வலப் பக்கமும் இடப்பக்கமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையார் விக்கிரகமும், முருகன் விக்கிரகமும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. இதற் கருகில் இருபக்கங்களிலும் மகாவிஷ்னு (தன்வந்திரி) விக்கிரகமும், சஞ்சீவி ஆஞ்சனேயர் விக்கிரகமும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.

கர்பக் கிரகத்தின் வெளிச் சுவரின் இரு பக்கங்களிலும் பஞ்ச உலோகங்களால் ஆன இராமர் சிலையும், கிருஷ்னர் சிலையும் வைக்கப்பட்டுள்ளன. கர்ப்பக் கிரகத்திற்குப் பின் கோவில் மண்டப இரு மூலை களிலும் அகஸ்த்திய மாமகரிசியின் விக்கிரகமும், விஸ்வாமித்திர மாமகரிசியின் விக்கிரகமும் பிரதிஸ்டை செய்யப் பட்டுள்ளன. கோயில் நுழைவாயிலுக்ருகில் மண்டபத்தினுள் அறுகோண வடிவிலான சிறிய குரு பீடமும் அமைக்கப்பட்டுள்ளது. சுவாமிகளால் இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்ட கொம்புத் தேங்காய் என்னும் அற்புதத் தெய்வாம்சம் பொருந்திய தேங்காயும், உயிர் இலிய்கமும் கண்ணாடிப் பேழையில் பக்தர்களின் தரிசனத்திற்காக வைக்கப்பட்டுள்ளன.

கோவிலுக்கு முன்னால் தபோவனத்தின் மத்தியில் அழகிய தாமரைத் தடாகம் ஒன்று தாமரைப் பூவடிவில் அமைக்கப்பட்டுள்ளது. அத் தடாகத்தின் தாமரைக்காய் போன்று மத்தியில் ஜல கண்ட தீஸ்வரன் என்னும் சிவலிங்கம் அமையப்பெற்றுள்ளது. செந்தாமரை மலர்கள் பூத்துக் குலுங்கும் இத் தாமரைத்தடாகத்தில் இருந்து மூலஸ்த்தானத்தை நோக்கி தியானம் செய்யக்கூடிய ஆசனங்களும் அமைக்கப்பட்டுள்ளன. கிழக்கில் சூரிய உதயத்தை நோக்கி தியானம் செய்யக் கூடிய வகையிலும் அவ் வாசனங்கள் அமைந்துள்ளன.

சுவாமிகளின் அற்புதங்களின் ஒன்றாகவும் அவரது அயராத முயற்சியின் பயனாகவும் அமையப் பெற்ற இக் காயத்ரி தேவி ஆலயம் 2006 ஏப்ரல் 17ம் திகதி சுவாமிகளாலேயே கும்பாபிஷேகம் செய்து வைக்கப்பட்டது. அதற்கு முன்னர் சுமார் 10 வருடங்களாக தென்னோலையினாலும், கம்பு தடிகளினாலும் அமையப் பெற்ற ஆலயத்தில் பூசை, யாகங்கள் நடைபெற்றுவந்தன. சுனாமிப் பேரலை 26-12-2004 இல் ஏற்பட்ட போது இக்கோயில் கும்பாபிஷேகம் செய்யப்படவில்லை.எனினும் கட்டுமானப் பணிகள் யாவும் பூர்த்தியடைந்து அழகாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய தினம் பூரணைப் பூசைக்கான ஆயத்தங்கள் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்ற வேளையில் காலை 8.50 மணியளவில் சுனாமிப் பேரலை ஏற்பட்டது. இப்பிரதேசத்தை மாத்திரமல்ல உலகின் பல பாகங்களை உலுக்கிய சுனாமிப் பேரலை இக்கோயிலை எதுவும் செய்யவில்லை. அதிசயம் ஆனால் உண்மை. பக்கத்தில் பிரதான வீதிக்கருகில் சிவலிங்கப் பிள்ளையார் ஆலயம் தரை மட்டமாகியது. (தற்போது புதிய கோயில் அமைத்து கும்பாபிஷேகம் செய்யப்பட்டுள்ளது.) ஆனால் காயத்திரி தேவி ஆலயம் கடற்கரைக்கு மிக அண்மையிலிருந்தும் சேதமடையவில்லை என்பது கும்பாபிஷேகத்திற்கு முதலே காயத்திரி தேவியின் ஆற்றலும் காயத்திரி சித்தரின்சக்தியும் இவ் ஆலயத்தில் இருந்த தென்பதற்குச் சான்று.

கும்பாபிஷேகத்திற்குப் பின்பு காயத்திரி தேவி இங்கு பரிபூரண அருளாட்சி நடாத்துகின்றாள். இக்கோயிலைத் தரிசிப்பவர்கள் அனைவரும் இதை உணர்ந்து தம் வாய்மொழி மூலமாகவே அங்குள்ளவர்களிடம் கூறிவிட்டுச் செல்கின்றனர். இன்று இது உலகப் பிரசித்தி பெற்ற ஸ்ரீ காயத்திரி தேவி ஆலய தவோவனமாக சுவாமிகளின் அருளாசியுடன் திகழ்கின்றது.

ஓம் மங்களம் ஓம்கார மங்களம்
ஓம் நமசிவாய சற்குருவே மங்களம் (ஓம்)
நா மங்களம் நகார மங்களம்
நாம தேவ நிலையான சற்குருவே மங்களம் (ஓம்)
மா மங்களம் மகார மங்களம்
மகா தேவ நிலையான சற்குருவே மங்களம் (ஓம்)
சி மங்களம் சிகார மங்களம்
சித்த புத்ர நிலையான சற்குருவே மங்களம் (ஓம்)
வா மங்களம் வகார மங்களம்
வாம தேவ நிலை யான சந்குருவே மங்களம் (ஓம்)
யா மங்களம் யகார மங்களம்
யல்லல் ரூப நிலையான சற்குருவே மங்களம் (ஓம்)

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
ஜெய் குருவே துணை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தம்பிலுவில் காயத்திரி தவோவனத்தில் அமைந்துள்ள ஸ்ரீ காயத்திரி தேவி ஆலயத்தின் ஒரு பக்கத் தோற்றம்



தம்பிலுவில் காயத்திரி தவோவனத்தில் அமைந்துள்ள ஸ்ரீ காயத்திரி தேவி ஆலயத்தின் உட்தோற்றம்



தம்பிலுவில் காயத்திரி தவோவனத்தில் அமைந்துள்ள ஸ்ரீ காயத்திரி தேவி ஆலயத்தின் முகப்புத் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MRS. ஓப்செற், திருக்கோவில்